


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் டோக்கியோவில் நேற்று முன்தினம் (30.5.2023) ஜப்பான் நாட்டின் முன்னணி நிறுவனமான ஓம்ரான் ஹேல்த்கேர் நிறுவனம் இந்தியாவில் முதல்முறையாக தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலையை நிறுவிடும் வகையில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், ஓம்ரான் ஹேல்த்கேர் நிறுவனத்திற்கும் இடையே, 128 கோடி ரூபாய் முதலீட்டில் தானியங்கி இரத்த அழுத்த மானிட்டர்களுக்கான உற்பத்தி தொழிற்சாலையை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஓம்ரான் ஹேல்த்கேர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திருமதி அயுமு ஒகடா (Ayumu Okada), செயல் அலுவலர் திருமதி கசுகோ குரியாமா (Kazuko Kuriyama), ஓம்ரான் ஹேல்த்கேர் தயாரிப்பு நிறுவனம் (வியட்நாம்) தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் டாகுடோ இவானகா (Mr. Takuto Iwanaka) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் முதல்முறையாக தமிழ்நாட்டில் ரூ.128 கோடியில் மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு தொழிற்சாலை!

# ஜப்பான் நாட்டின் 'ஓம்ரான் ஹெல்த் கேர்' நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது!

**டோக்கியோ, ஜீன் 1-**

**ஜப்பான் நாட்டின் முன்னணி நிறுவனமான ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம் இந்தியாவில் முதல்முறையாக தமிழ்நாட்டில் ரூ.128 கோடி முதலீட் டில் மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு தொழிற்சாலை நிறுவிட புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

அதன் விபரம் வருமாறு :-

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார்.

23.5.2023 அன்று சிங்கப்பூர் சென்ற முதலமைச்சர் அவர்கள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாட்டின் உள்ள ஒசாகாவில் தனது அரசு முறைப் பயணத்தை முடித்துக் கொண்டுதற்போது டோக்கியோவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இப்பயணங்களின்போது முதலமைச்சர் அவர்கள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளின் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொண்டார்.

**ஜப்பான் நாட்டின் முன்னணி நிறுவனமான ஓம்ரான் ஹேல்த்கேர் நிறுவனம் இந்தியாவில் முதல் முறையாக தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலையை நிறுவிட முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்.**

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஓம்ரான் (OMRON) நிறுவனம், தொழில்துறை ஆட்டோமேஷன், ஹெல்த்கேர், மின்னணு பாகங்கள் தயாரிப்பு களில் ஈடுபட்டு வருகிறது. தற்போது, ஓம்ரான் நிறுவனம் சுமார் 120 நாடுகளுக்கு தனது தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கி வருகிறது.

ஓம்ரான் கார்ப்பரேஷனின் ஒரு பிரிவான ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம், டிஜிட்டல் இரத்த அழுத்த மானிட்டர்கள், சுவாச சிகிச்சைக்கான நெபுலைசர்கள் ஆகியவற்றைத் தயாரித்து விற்பனை செய்வதில் உலகளவில் முன்னணி நிறுவனமாக விளங்கி வருகிறது.

மேலும், இந்நிறுவனம், குறைந்த அதிர்வெண் வலி சிகிச்சை உபகரணங்கள் (lowfrequency pain therapy equipment), மின்னணு வெப்பமானிகள், உடல் அமைப்பு மானிட்டர்கள் (body composition monitors) உற்பத்தியிலும் ஈடுபட்டு வருகிறது.

**உலகின் முன்னணி நிறுவனம்!**

இந்நிறுவனம் தமிழ்நாட்டில் மருத்துவ உபகரணங்களைத் தயாரிக்கும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (30.5.2023) மாலை டோக்கியோவில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனத்திற்கும் இடையே, 128 கோடி ரூபாய் முதலீட்டில் தானியங்கி இரத்த அழுத்த மானிட்டர்களுக்கான உற்பத்தி தொழிற்சாலையை நிறுவுவதற்கான புரிந்து ணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம், உலகின் முன்னணி நிறுவனமான ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஓம்ரான் ஹேல்த்கேர் நிறுவனம் இந்தியாவின் முதல் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி தொழிற்சாலையை தமிழ்நாட்டில் தொடங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

ஓம்ரான் நிறுவனத்தின் முதலீடு, தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழ்நிலை மீதான தங்களின் நம்பிக்கையை மட்டுமின்றி, வெற்றிகரமான அதன் மருத்துவக் கட்டமைப்பின் மீதான உங்கள் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

தமிழ்நாடு சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. எளிதில் கிடைக்கக்கூடிய தரமான மருத்துவச் சேவைகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. மருத்துவத் துறைக்கான உற்பத்தித் தொழிலைத் தொடங்குவதன் மூலம் எங்கள் மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவதில் ஓம்ரான் நிறுவனம் முக்கியப் பங்காற்ற இருக்கிறது. தங்களது முயற்சிகள் சிறப்பாக அமைய வாழ்த்துகள், நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஓம்ரான் ஹேல்த்கேர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திருமதி அயுமு ஒகடா (Ayumu Okada), செயல் அலுவலர் திருமதி கசுகோ குரியாமா (Kazuko Kuriyama), ஓம்ரான் ஹேல்த்கேர் தயாரிப்பு நிறுவனம் (வியட்நாம்) தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் டாகுடோ இவானகா (Mr. Takuto Iwanaka) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் பாடநூல் கழகக் கிடங்கில் பாடப் புத்தகங்கள் பள்ளிகளுக்கு அனுப்பும் பணியை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரியசாமி, பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

கம்பம் பகுதியில் காட்டுயானை தாக்கி பலியான

# பால்ராஜ் குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜீன் 1-**

**தேனி மாவட்டம், கம்பம் பகுதியில் காட்டுயானை தாக்கி பலியான பால்ராஜ் குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அக்குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிதி வழங்கவும் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:-

தேனி மாவட்டம், கம்பம் பகுதியில் கடந்த 27.5.2023 அன்று இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த பால்ராஜ் என்பவர் அரிக்கொம்பன் என்ற காட்டுயானையை எதிர்பாராத விதமாக பார்த்ததில் அதிர்ச்சியடைந்து கீழே விழுந்து சிகிச்சைக்காக தேனி மாவட்டம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப்பட்ட போதும் அதற்கு பலனின்றி நேற்று முன்தினம் (30.5.2023) அவர் உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த பால்ராஜ் அவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் இந்த அரிக்கொம்பன் என்ற காட்டு யானையைப் பிடிப்பதற்கு தமிழ்நாடு அரசின் வனத்துறை அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதற்கென மூத்த அனுபவம்வாய்ந்த வன அலுவலர்களைக் கொண்ட ஒரு சிறப்புக் குழு திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தின் கள இயக்குநரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கால்நடை மருத்துவர்களைக் கொண்ட ஒரு குழுவும், முதுமலை மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகம் மற்றும் உள்ளூர் வனப் பகுதியைச் சார்ந்த 16 யானைத்தட கண்காணிப்புக் காவலர்கள் இந்த அரிக்கொம்பன் என்ற காட்டுயானையின் நடமாட்டத்தை கண்காணித்து அந்த யானையை பத்திரமாக வனப் பகுதிக்கு அனுப்ப நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இதற்கென ஒரு தனி கட்டுப்பாட்டு அறையும் கம்பம் வனச் சரக அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, பிறபகுதியினைச் சார்ந்த 200 வனத்துறை அலுவலர்கள் அப்பகுதி மக்களின் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

தேனி மாவட்ட ஆட்சியரும் அங்குள்ள நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து தேவையான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அண்ணல் காந்தி பாடத்தை அகற்றி விட்டு

# சாவர்க்கர் பாடத்தைத் திணிக்கிறது தில்லி பல்கலைக் கழகம்!

## கல்விக் கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்!

*புதுடெல்லி, ஜூன் 1-*

தில்லி பல்கலைக்கழகம் பி.ஏ. (ஹானர்ஸ்) அரசியல் அறிவியல் பாடத் திட்டத்தின் ஐந்தாம் செமஸ்டரில் மகாத்மா காந்தி குறித்த பாடத்தை நீக்கி விட்டு இந்துத்துவா தலைவர் வி.டி. சாவர்க்கரைப் பற்றிய பாடத்தை திணிக்க முயற்சி மேற்கொண்டுள்ளதாக ஆசிரியர்கள் சனிக்கிழமை கூறினர். இனி மூன்று ஆண்டு பட்டப்படிப்பைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் காந்தியைப் பற்றி படிக்க மாட்டார்கள் என ஆசிரியர்கள் கூறினர்.

இதுதொடர்பான தீர்மானம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கல்விக் கவுன்சில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த நடவடிக்கை கல்வியை காவிமயமாக்கும் முயற்சி மட்டுமல்ல காந்தியையும் சாவர்க்கரையும் ஒப்பிடும் முயற்சி என ஆசிரியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட அகாடமி கவுன்சில் உறுப்பினர் அலோக் பாண்டே கூறுகையில், "முன்பு, ஐந்தாம் செமஸ்டரில் காந்தி குறித்த பாடமும், ஆறாம் செமஸ்டரில் அம்பேத்கர் பற்றிய பாடமும் இருந்தன. இப்போது, சாவர்க்கரைப் பற்றிய கட்டுரையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

காந்தியின் பாடத்தை நீக்கி விட்டு சாவர்க்கரை திணித்துள்ளனர். மூன்று ஆண்டு படிப்பைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் இனி காந்தியைப் பற்றிய பாடத்தை படிப்பதற்கு வாய்ப்பில்லை" என்றார்.

மேலும் அவர் கூறுகையில், "நிலைக் குழுவில் முன்மொழிந்த பாடத் திட்டத்தை எதிர்த்தேன், அவர்கள் காந்தி பற்றிய தாள் ஐந்தாம் பருவத்தில் இருந்து நீக்கப்படாது என்று உறுதியளித்தனர். ஆனால் இப்போது கல்விக் கவுன்சிலில், நிலைக்குழு கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வந்தனர் என்றார்.

நிர்வாகக் குழுவின் முன்னாள் உறுப்பினர் ராஜேஷ் ஜா, "காந்தியின் கருத்துக்கள் நமது சுதந்திரப் போராட்டத்தின் கூட்டு நனவை பிரதிபலிக்கின்றன. அவரது தத்துவம் நல்ல அரசியல் மற்றும் நல்ல தனிநபர்களுக்காக நிற்கிறது. காந்தியின் சிந்தனைகளை மாணவர்கள் அறிந்து கொள்வதற்காக முதல், இரண்டாவது செமஸ்டர்களில் காந்தி தொடர்பான பாடத்தை வைக்க வேண்டுமென்றார்".

தேசியக் கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாகவே சாவர்க்கர் குறித்த பாடம் திணிக்கப்படுவதாக பேராசிரியர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். இருப்பினும் மகாத்மா காந்தி தொடர்பான பாடங்கள் ஏழாவது செமஸ்டரில் இடம் பெறும் என சப்பைக் கட்டு கட்டியுள்ளது தில்லி பல்கலைக் கழகம்.

எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை படைத்த

# முத்தமிழ்ச் செல்வி - அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்து!

## மேலும் சாதனைகள் படைக்க வாழ்த்தினார்!

*சென்னை, ஜூன் 1-*

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறைஅமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த தமிழ்நாட்டைச் சார்ந்த திருமதி என்.முத்தமிழ்ச்செல்வி மற்றும் ராஜசேகர் பச்சை ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த தமிழ்நாட்டைச் சார்ந்த திருமதி என்.முத்தமிழ்ச்செல்வி மற்றும் ராஜசேகர் பச்சை ஆகியோர் நேற்று முன்தினம் (30.05.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் திருமதி என். முத்தமிழ்ச்செல்வி மற்றும் ராஜசேகர் பச்சை ஆகியோரைப் பாராட்டி, இதுபோன்று மென்மேலும் பல சாதனைகளை படைத்திட வாழ்த்து தெரிவித்தார். மேலும், விளையாட்டுத் துறையில் இதுபோன்று ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு முன்னுதாரணமாகவும், ஊக்கம் அளிக்கும் வகையிலும் விளங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம், ஜோகில்பட்டியைச் சார்ந்த திருமதி முத்தமிழ்ச்செல்வி அவர்கள் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த தமிழ்நாட்டைச் சார்ந்த முதல் பெண் ஆவார். மே 23ஆம் தேதி மவுண்ட் எவரெஸ்ட் பகுதியை வெற்றிகரமாக அடைந்தார்.

திருமதி முத்தமிழ்ச் செல்வி அவர்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் நிதியுதவியாக ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 28.03.2023 அன்று வழங்கப்பட்டது. மேலும், தன்னார்வ அமைப்புகள் மூலம் கூடுதலாக ரூபாய் 15 இலட்சம் நிதியுதவியும் வழங்கப்பட்டது.

மேலும், சென்னை கோவளம், மீனவ கிராமத்தைச் சார்ந்த ராஜசேகர் பச்சை (வயது 28) எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார். இந்திய அலைசறுக்கு வீரரான (surfing player) இவர் சென்னைபடூர் இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளங்கலை கணினி (B.C.A) பட்டப்படிப்பை முடித்துள்ளார். இவர் மே 19ஆம் தேதி காலை 5.30 மணிக்கு எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ.மேகநாத ரெட்டி, அலைசறுக்கு சங்க மாநில துணைத் தலைவர் வீரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணை மேலாளர் திருமதி மெரிசி ரெஜினா, முதுநிலை மண்டல மேலாளர் திருமதி சுஜாதா ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை முகாம் அலுவலகத்தில், நேற்று முன்தினம் (30.05.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த தமிழ்நாட்டைச் சார்ந்த ளஎன்.முத்தமிழ்ச்செல்வி, ராஜசேகர் பச்சை ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.

கவிஞர் தமிழ்தாசன் தலைமை!

# கழகத் தீர்மானக்குழு நிர்வாகிகள் கூட்டம்!

## தீர்மானக்குழுச் செயலாளர்கள் அறிவிப்பு!

தி.மு.க. தீர்மானக்குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் நாளை (2.6.2023 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில், கழக தீர்மானக்குழுத் தலைவர் **கவிஞர் தமிழ்தாசன்** தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தீர்மானக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- 1. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

2. கழக ஆக்கப் பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.05.2023

**மீ.அ.வைத்தியலிங்கம்**
**கீரை எம்.எஸ்.விஸ்வநாதன்**
**அக்ரி கே.பி.டி.கணேசன்**
செயலாளர்கள்,
தி.மு.க. தீர்மானக்குழு